**செய்தி வெளியீடு எண்: 607** **நாள்: 12.10.2012**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (12.10.2012) தலைமைச் செயலகத்தில், வருவாய்த் துறையின் சார்பில் 103 கோடியே 39 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திற்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், 1601 கோடியே 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பல்வேறு திட்டப் பணிகளைத் துவக்கி வைத்து, நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களையும் வழங்கினார்கள்.

புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் மாவட்ட நிருவாகம் செம்மையாக நடைபெறவும், மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களும், பணியாளர்களும் சிறப்பாகப் பணிபுரிய அனைத்து வசதிகளுடன் கூடிய அரசுக் கட்டடங்கள் மிகவும் இன்றியமையாதவை என்பதனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திருப்பூர் மாநகரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட பெருந்திட்ட வளாகத்தை 103 கோடியே 38 லட்சத்து 93 ஆயிரத்து 800 ரூபாய் செலவில் அமைத்திட ஒப்புதல் வழங்கினார்கள். அதன்படி, புதியதாக அமைக்கப்படவுள்ள திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

காலவிரையத்தினைத் தவிர்த்து பொது மக்கள் எளிதில் வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகி தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், நிருவாக நலன் கருதியும், மக்கள் தொகை அடிப்படையில், வட்டங்களைப் பிரிப்பதன் மூலம் நிர்வாகத் திறனை மேம்படுத்திட இயலும் என்கிற உயரிய நோக்கத்தின் அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் புதிய வட்டங்கள் உருவாக்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி புதியதாக உருவாக்கப்பட்டுள்ள திருவண்ணாமலை மாவட்டம் – கலசப்பாக்கம் வட்டம்; நாமக்கல் மாவட்டம் – கொல்லிமலை வட்டம்; விழுப்புரம் மாவட்டம் – சின்ன சேலம் வட்டம்; சிவகங்கை மாவட்டம் – திருப்புவனம் ஆகிய வட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

திருவண்ணாமலை மாவட்டம் – கலசப்பாக்கத்தை புதிய வட்டமாக உருவாக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 2 கோடியே 41 லட்சத்து 53 ஆயிரத்து 300 ரூபாய்க்கு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்த புதிய வருவாய் வட்டம், போளூர் வட்டத்திலுள்ள 9 குறுவட்டங்களில், கடலாடி, கேட்டவரம்பாளையம் மற்றும் கலசப்பாக்கம் ஆகிய 3 குறுவட்டங்களை உள்ளடக்கி உள்ளது. இப்புதிய வட்டம் உருவாக்கப்பட்டுள்ளதன் மூலம், 52 கிராமங்களைச் சார்ந்த 1 லட்சத்து 40 ஆயிரம் மக்கள் பயனடைவதோடு, ஏறத்தாழ 60 கிலோ மீட்டர் தூர பயண குறைக்கப்படும்.

நாமக்கல் மாவட்டம், செம்மேட்டினை தலைமையிடமாகக் கொண்டு, புதிய கொல்லிமலை வருவாய் வட்டத்தினை உருவாக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2 கோடியே 91 லட்சத்து 3 ஆயிரம் ரூபாய்க்கு ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த வட்டம் திரும்புலிநாடு மற்றும் வாழவந்திநாடு ஆகிய குறுவட்டங்களைச் சார்ந்த 16 வருவாய் கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கும். கொல்லிமலை வட்டம் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளதன் மூலம், 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் பகுதியினைச் சார்ந்த பழங்குடியினர் பயன்பெறுவதோடு, 50 கிலோ மீட்டர் தூரப் பயணம் மற்றும் பண விரையம் தவிர்க்கப்படும்.

விழுப்புரம் மாவட்டம், சின்ன சேலம், புதிய வருவாய் வட்டத்தினை உருவாக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2 கோடியே 41 லட்சத்து 63 ஆயிரத்து 300 ரூபாய்க்கு ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டது. கள்ளக்குறிச்சி மற்றும் சங்கராபுரம் ஆகிய வட்டங்களைச் சீரமைத்து சின்னசேலம் வட்டம் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளது. சின்னசேலம் வட்டம் புதியதாக உருவாக்கியதன் மூலம் சுமார் 85 கிராமங்களைச் சார்ந்த

2 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் பயன் பெறுவார்கள். மேலும் இப்புதிய வட்டம் அமைப்பதன் மூலம், சங்கராபுரம், கல்வராயன் மலைப் பகுதிகளைச் சார்ந்த 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பழங்குடியினருக்கு சுமார் 50 கிலோ மீட்டர் தூரப் பயணம் முற்றிலுமாக தவிர்க்கப்படும்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் புதிய வருவாய் வட்டமாக உருவாக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 2 கோடியே 41 லட்சத்து 53 ஆயிரத்து 300 ரூபாய்க்கு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கப்பட்டது. திருப்புவனம், திருப்பாசேத்தி, கொந்தகை ஆகிய மூன்று உள்வட்டங்களுக்கு மையப்பகுதியாக திருப்புவனம் உள்ளதால் நிருவாக நலனுக்காவும், பொதுமக்களின் வசதிக்காகவும் அப்பகுதியைச் சேர்ந்த 43 கிராமங்களை உள்ளடக்கி திருப்புவனத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தின், கிராமப் பகுதிகளில், நகராட்சிப் பகுதிகளும், பேரூராட்சிப் பகுதிகளும் கலந்து, 154 உள்ளாட்சி அமைப்புகளுக்கு இணையாக 81 வருவாய் கிராமங்கள் மட்டுமே உள்ள நிலையில், பல வருவாய் கிராமங்களின் மக்கள் தொகையானது ஏறத்தாழ 30 ஆயிரத்திலிருந்து 1 லட்சம் வரை உள்ளது. இதன் காரணமாக ஏற்படும் நிர்வாகச் சிக்கல்களை சீர்படுத்தும் நோக்குடனும், பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றிட வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனும், கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நெடு நாளைய கோரிக்கையினை ஏற்று, வருவாய் கிராமங்களை சீரமைத்து, 107 புதிய வருவாய் கிராமங்களை உருவாக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள். மேலும், இந்த கிராமங்களின் நிருவாக வசதிக்காக 5 கோடியே 35 லட்சம் ரூபாய் செலவில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட நிதி வழங்கியதோடு, 107 கிராம நிருவாக அலுவலர் மற்றும் 107 கிராம உதவியாளர் பணியிடங்களை புதியதாகத் தோற்றுவிக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள். இதன்படி 107 வருவாய் கிராமங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று, கன்னியாகுமரி மாவட்டம், அகத்தீஸ்வரம் வட்டத்திற்கு 1244 சதுர மீட்டர் பரப்பளவில்

2 கோடியே 3 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

மக்களின் தேவைகளை அறிந்து, அவற்றை நிறைவேற்றிடும் வகையில், உரிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள, 30 மாவட்டங்களைச் சார்ந்த வருவாய்த்துறை அலுவலர்களுக்கு 7 கோடியே 2 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 124 புதிய ஜீப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நத்தம் நிலவரித்திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டத்தில் 7 கிராமங்களில் நில அளவைத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு 1,577 கோடி ரூபாய் மதிப்புள்ள 221 ஏக்கர் பரப்பளவு கொண்ட வீட்டுமனைப் பட்டாக்களை 5229 பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் தலைவர், வருவாய்த்துறை முதன்மைச் செயலாளர், வருவாய் நிருவாக ஆணையர் (பொறுப்பு) மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 12.10.2012